**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், வாலாஜாபேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்**

**முன்னிலை: திருமதி.ஈ.புவனேஷ்வரி, B.A, B.L.,**

நீதித்துறை நடுவர் எண்.2, வாலாஜாபேட்டை.(FAC)

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ஆம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.92/2024**

**CNR.NO.TNRP0E-002292-2024**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
வாலாஜா காவல் நிலையம்,
**குற்ற எண்.489/2021.** ...குற்றமுறையீடுபவர்

//எதிராக//

குமரேசன், வயது-50,
த/பெ.மார்கபந்து,
ஈஸ்வரன் கோயில் தெரு,
அம்மூர்,
இராணிப்பேட்டை. ...குற்றஞ்சாட்டப்பட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | சி.சி.எண்.92/2024 |
| 2. | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | வாலாஜா காவல் நிலையம், குற்ற எண்.489/2021 |
| **குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம்** | | |
| 3. | பெயர் | எதிரி குமரேசன் |
| 4. | எதிரியின் தந்தை/கணவர் பெயர் | மார்கபந்து |
| 5. | தொழில் | - |
| 6. | எதிரியின் முகவரி | ஈஸ்வரன் கோயில் தெரு, அம்மூர், இராணிப்பேட்டை. |
| 7. | வயது | 50 |

<table>
<tr><th colspan="5">நாள்</th></tr>
<tr><td>8.</td><td>குற்ற நிகழ்வு</td><td colspan="3">13.09.2021</td></tr>
<tr><td>9.</td><td>புகார்</td><td colspan="3">15.09.2021</td></tr>
<tr><td>10.</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>11.</td><td>எதிரி பிணையில் வந்த தேதி</td><td colspan="3">13.09.2021</td></tr>
<tr><td>12.</td><td>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td colspan="3">02.09.2024</td></tr>
<tr><td>13.</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">23.01.2025</td></tr>
<tr><td>14.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">17.07.2026</td></tr>
<tr><td>15.</td><td>தீர்ப்பு</td><td colspan="3">03.08.2026</td></tr>
<tr><td>16.</td><td>தீர்ப்பு நகல் வழங்குதல் அல்லது எதிரி மீதான வழக்கின் தீர்வு</td><td colspan="3">கு.வி.மு.ச 255(1)–ன் கீழ் விடுதலை</td></tr>
<tr><td>17.</td><td>தாமதத்திற்குரிய காரணம்</td><td colspan="3">–</td></tr>
<tr><th colspan="5">வழக்கின் நிலை</th></tr>
<tr><td>18.</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">விசாரணை முழுவதும்</td></tr>
<tr><td>19.</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">13.08.2024</td></tr>
<tr><td>20.</td><td>பிரிவு 240 கு.ந.மு.வி (முதல் கேள்வி)</td><td colspan="3">26.11.2024</td></tr>
<tr><td>21.</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்தரவு</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="6">22.</td><td rowspan="6">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><th>அரசு தரப்பு சாட்சி</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>23.01.2025</td><td>23.01.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>23.01.2025</td><td>23.01.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>23.01.2025</td><td>23.01.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>23.01.2025</td><td>23.01.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>23.01.2025</td><td>23.01.2025</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.6 | 23.01.2025 | 23.01.2025 |
| | | அ.சா.7 | 05.03.2025 | 23.02.2026 |
| | | அ.சா.8 | 05.03.2025 | 05.03.2025 |
| | | அ.சா.9 | 18.02.2026 | 18.02.2026 |
| | | அ.சா.10 | 04.03.2026 | 04.03.2026 |
| | | அ.சா.11 | 17.07.2026 | 17.07.2026 |
| 23. | பிரிவு 313 கு.வி.மு.ச (வினாவல்) | 24.07.2026 | | |
| 24. | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 25. | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இவ்வழக்கு 02.09.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 01.08.2026ம் தேதியன்று விசாரிக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் **அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை எண்.2** அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு.A.மாறன்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

**1.** இவ்வழக்கில் கடந்த 13.09.2021ம் தேதி இரவு 19.15 மணிக்கு வாலாஜாவிலிருந்து சோளிங்கர் செல்லும் ரோட்டில் படவேட்டம்மன்

கோயில் அருகே மக்கள் உணவத்தின் எதிரில் சாலையின் இடதுபுறம் ஓரமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இறந்துபோன மகேஷ்பாபு சைக்கிளில் வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தபோது, அவர் மீது எதிரி குமரேசன் என்பவர் அரசு பஸ் TN-23-N-2254 எண்ணுள்ள வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமல் ஓட்டிச் சென்று மீது மோதி சைக்கிளிக்கு சேதத்தையும், மகேஷ்பாபுக்கு மரணத்தையும் உண்டுபன்னியக் குற்றத்திற்காக **எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ்** இறுதி அறிக்கை 13.08.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கு.வி.மு.ச பிரிவு 190(1)(பி)-ன் படி கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 204-ன் படி அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன் கு.வி.மு.ச பிரிவு 207-ன் படி நகல்கள் வழங்கப்பட்டு கு.வி.மு.ச பிரிவு 240-ன் படி **எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழும்** குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது எதிரி அதை மறுத்ததால் கு.வி.மு.ச பிரிவு 242-ன் படி அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**3.** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.11** வரை உள்ள சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தியும், **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரை உள்ள சான்றாவணங்களையும் வழக்கிற்கு ஆதாரங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்தாக ஏதும் கைப்பற்றப்படவில்லை.

**4**. அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற பிறகு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் சாட்சியம் என்று பதில் கூறினார். அவர் தரப்பில் சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார். மேலும், எதிரி தரப்பில் எந்த சாட்சியமும் விசாரிக்கவில்லை, ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.7 மற்றும் அ.சா.10ஐ தவிர அனைத்து சாட்சிகளும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருப்பதால், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபித்துள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்குமாறு வாதம் புரிந்தார்.

**6.** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டினை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றுக் கூறி எதிரியை விடுவிக்க வேண்டினார்.

**<u>தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?</u>**

**7.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. எதிரி மீது **இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன்** கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்க

வேண்டுமென்றால், அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் கடந்த 13.09.2021ம் தேதி இரவு 19.15 மணிக்கு வாலாஜாவிலிருந்து சோளிங்கர் செல்லும் ரோட்டில் படவேட்டம்மன் கோயில் அருகே மக்கள் உணவத்தின் எதிரில் சாலையின் இடதுபுறம் ஓரமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இறந்துபோன மகேஷ்பாபு சைக்கிளில் வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தபோது, அவர் மீது எதிரி குமரேசன் என்பவர் அரசு பஸ் TN-23-N-2254 எண்ணுள்ள வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமல் ஓட்டிச் சென்று மீது மோதி சைக்கிளிக்கு சேதத்தையும், மகேஷ்பாபுக்கு மரணத்தையும் உண்டுபன்னியதுப் பற்றி சாட்சியம் அளித்து இருக்க வேண்டும்.

**8.** அவ்வாறு, அரசு தரப்பில் எதிரி மீது **இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன்** கீழான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் வகையில் புகார்தாரரான திருமதி.துர்காதேவி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரேத விசாரணை சாட்சிகளாக திருமதி.ஞானசௌந்தரி அ.சா.2 ஆகவும், திரு.மகேந்திரன் அ.சா.5 ஆகவும், கண்ணுற்ற சாட்சிகளாக திரு.மகேந்திரன் அ.சா.3 ஆகவும், திரு.வினோத்குமார் அ.சா.4 ஆகவும், திரு.முரளி அ.சா.7 ஆகவும், பார்வை மகசர் சாட்சிகளாக திரு.சம்பத்குமார் மற்றும் திரு.வேலு அ.சா.6 மற்றும் அ.சா.8 ஆகவும், கேள்விப்பட்ட சாட்சியாக திரு.காபார் அ.சா.10 ஆகவும், இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் அ.சா.9 ஆகவும், புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.சாலமன் ராஜா அ.சா.11 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

**9.** இவர்களுடைய சாட்சியத்திலிருந்து, எதிரி மீது **இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன்** கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கையில், புகார்தாரர் அ.சா.1 திருமதி.துர்காதேவி என்பவர் அவருடைய சாட்சியத்தில், கடந்த 13.09.2021ம் தேதி இரவு 19.15 மணியளவில் அ.சா.1ன் அப்பாவான இறந்துபோன மகேஷ்பாபு என்பவர் வாலாஜாபேட்டையில் வேலையை முடித்துவிட்டு சோளிங்கர் வழியாக சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தபோது, பின்புறத்தில் பதிவு எண்.TN–23–N–2254 கொண்ட அரசு பேருந்து வேகமாக வந்து அவரது அப்பாவின் மோதி விபத்து ஏற்படுத்தியதாக, விபத்தை நேரில் பார்த்த செந்தாமரைகண்ணன் மற்றும் மகேந்திரன் ஆகியோர் போன் மூலம் அ.சா.1ஐ தொடர்புக் கொண்டு தகவல் தெரிவித்ததாகவும், பின்பு 15.09.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் சம்பவம் தொடர்பாக வாலாஜா காவல் நிலையத்தில் **அ.சா.ஆ.1 ஆன புகார்** கொடுத்ததாகவும், அ.சா.ஆ.1 புகாரை அ.சா.6 சம்பத் குமார் என்பவர் எழுதிக் கொடுத்ததாகவும், சம்பவத்தன்று அரசு பேருந்து பதிவு எண்.TN–23–N–2245 மோதி விபத்து ஏற்பட்டதாக அ.சா.ஆ.1 புகாரில் தெரிவித்துள்ளதாகவும், மேலும் சம்பவத்தினால் அவரது அப்பாவிற்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

**10.** இந்நிலையில் பிரேத விசாரணை சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 திருமதி.ஞானசௌந்தரி அவரது சாட்சியத்தில், கடந்த 13.09.2021ம் தேதி இரவு 7.15 மணியளவில் வாலாஜாவிலிருந்து சோளிங்கர் செல்லும் சாலையில் விபத்து ஏற்பட்டதாக சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் போன் மூலம் தகவல் தெரிவித்ததாகவும், பின்பு அரசு பேருந்து பதிவு எண்.2254

ஓட்டுநர் வேகமாக வந்து மோதியதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரியவந்ததாகவும், அறுவை சிகிச்சைக்கு பின்பு 16ம் தேதி அவரது கணவர் இறந்துவிட்டதாகவும், அவரது கணவரின் மீது நடைப்பெற்ற பிரேத விசாரணைக்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், பேருந்து பதிவு எண் தவறுதலாக கொடுத்துவிட்டதால் புகாரின் மீது நடவடிக்கை எடுக்காததால் மாண்பமை உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்ற பின்பு அரசு பேருந்தின் பதிவு எண் மாற்றி தந்து விசாரணை எடுக்கப்பட்டது என்று சாட்சியமளித்துள்ளார்.

**11.** இந்நிலையில் மற்றொரு பிரேத விசாரணை சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 திரு.மகேந்திரன் அவரது சாட்சியத்தில், கடந்த 13.09.2021ம் தேதி இரவு 7.15 மணியளவில் அவரது தெருவை சார்ந்த நபர்கள் அவரது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்ததாகவும், அரசு பேருந்து வேகமாக வந்து மோதியதில் விபத்து ஏற்பட்டதாக கேட்டுத் தெரிந்துக்கொண்டதாகவும், பின்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரது அண்ணன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், அவரது அண்ணனுக்கு நடைப்பெற்ற பிரேத விசாரணையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**12.** இந்நிலையில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 திரு.மகேந்திரன் அவரது சாட்சியத்தில், கடந்த 13.09.2021 அன்று 7 மணியிலிருந்து 7.30 மணியளவில் சோளிங்கர் சாலையில் மக்கள் உணவகம் எதிரரே அவரது ஊர்காரர் பசங்களுடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது சாலையின் ஓரமாக

சென்றுக்கொண்டிருந்த மகேஷ்பாபு என்பவரை எதிரி பேருந்தை ஆரண் அடிக்காமல் வேகமாக ஓட்டி வந்து மகேஷ்பாபு மீது மோதியதில் தூக்கி கல் மீது வீசப்பட்டதாகவும், பின்பு சிகிச்சைக்காக வாலாஜாபேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும், சம்பவ சமயம் எதிரி ஓட்டி வந்த பேருந்தின் பதிவு எண்ணை கவனிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**13.** மேலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 திரு.வினோத்குமார் அவரது சாட்சியத்தில், கடந்த 13.09.2021ம் தேதி இரவு 7 மணியவில் வாலாஜாவிலிருந்து சோளிங்கர் செல்லும் சாலையில் வந்துக்கொண்டிருந்தபோது திடீரென்று சத்தம் கேட்டதாகவும், திரும்பி பார்த்தபோது மகேஷ்பாபு சாலையில் அரசு பேருந்து அதன் பதிவு எண்.TN–23–N–2254 அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டிச் சென்று அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், பின்பு அவ்வழியாக வந்த ஆட்டோ மூலம் மகேஷ்பாபுவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், சம்பவம் குறித்து போலிசாருக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**14.** மேலும், இவ்வழக்கின் முக்கிய கண்ணுற்ற சாட்சியான சம்பவ சமயம் எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் அரசு பேருந்தின் நடத்துனரான அ.சா.7 முரளி அவரது சாட்சியத்தில், எதிரி அரசு பேருந்து ஓட்டுநர் என்ற விதத்தில் தெரியும் என்றும், இவ்வழக்கு தொடர்பாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அரசு தரப்பில் அவரது குறுக்கு விசாரணையின்போது எதிரியை தெரியாது என்றும், சம்பவத்தன்று எதிரி ஓட்டிச் சென்ற அரசு பேருந்தில் தான் நடத்துனராக

பணி செய்யவில்லை என்றும், ஆற்காடு பணிமனையின் மேலாளராக கஃபார் என்பவர் இருந்தாரா என்றால் அது குறித்து தெரியாது என்றும், வழக்கின் சங்கதிகளுக்கு முற்றிலும் முரணாக சாட்யமளித்துள்ளார்.

**15.** இந்நிலையில் பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 திரு.சம்பத்குமார் அவரது சாட்சியத்தில், கடந்த 13.09.2021ம் தேதி இரவு 7 மணியிலிருந்து 7.15 மணியளவில் மகேஷ்பாபு என்பவருக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக 16ம் தேதி காலை 6.30 மணியளவில் விபத்து நடந்த இடமான சோளிங்கர் சாலையில் படவேட்டம்மன் கோவில் அருகே மக்கள் உணவகம் இடதுபுறமாக வைத்து விசாரணை செய்ததாகவும், போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், **அ.சா.ஆ.2 ஆன பார்வை மகசரில்** சாட்சியாக இருந்து முதலாவது கையெழுத்து செய்ததாகவும், சம்பவ சமயம் சம்பவ இடத்தில் அவர் இல்லை என்றும், தகவல் மூலம் விபத்து குறித்து தெரிந்துக்கொண்டதாகவும், சம்பவ இடமானது அதிக போக்குவரத்து செல்லக்கூடிய இடம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**16.** மேலும், மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.8 திரு.வேலு அவரது சாட்சியத்தில், கடந்த 16.09.2021ம் தேதி காலை 6.30 மணிக்கு வீட்டிலிருந்து வேலைக்கு சென்றுக்கொண்டிருந்தபோது அவரது ஊரை சேர்ந்த பாபு என்பவருக்கு சாலை விபத்து ஏற்பட்டது தொடர்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதற்கு சாட்சியாக இருந்து **அ.சா.ஆ.3 ஆன பார்வை மகசரில் இரண்டாவது கையெழுத்து** செய்ததாகவும், விபத்தானது அம்மா உணவகம் அருகே நடந்ததாக கேள்விப்பட்டு தெரிந்துக்கொண்டதாகவும்,

கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தார்கள் என்று தெரியாது என்றும், தனக்கு எழுத படிக்க தெரியாது என்றும், போலிசார் படித்து காண்பித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**17.** இந்நிலையில், கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.10 கஃபார் அவரது சாட்சியத்தில், கடந்த 2022ம் ஆண்டு ஆற்காடு போக்குவரத்து பணிமனையில் இருந்து வேலூர் போக்குவரத்து பணிமனைக்கு மாறுதலாகி சென்றுவிட்டதாகவும், இவ்வழக்கு தொடர்பாக வேறு எதுவும் தெரியாது என்றும், போலிசார் அழைத்ததன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்ததாக சாட்சியமளித்து அரசு தரப்பில் அ.சா.10 பிறழ் சாட்சியாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

**18.** இந்நிலையில், முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 காவல் உதவி ஆய்வாளர் திரு.பார்த்திபன் அவரது சாட்சியத்தில், கடந்த 15.09.2021 அன்று வாலாஜா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக 22.30 மணியளவில் நிலையப் பொறுப்பிலிருந்த போது அ.சா.1 துர்காதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 489/2021 இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் **அ.சா.ஆ.4 ஆன முதல் தகவல் அறிக்கையை** பதிவு செய்ததாகவும், பின்பு மறுநாள் காலை 6.30 மணியளவில் இவ்வழக்கின் சம்பவம் இடம் சென்று அங்கு காணப்பட்ட சாட்சிகளான சம்பத் குமார், வேலு ஆகியோர்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மகேஷ் பாபு என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக 16.09.2021

அன்று காலை 10.00 மணியளவில் கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்ட பிரிவுகளான இ.த.ச பிரிவுகள் 279, 337 என்று இருந்ததை இ.த.ச பிரிவுகள் 279, 304(A) என்று சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து **அ.சா.ஆ.6 ஆன பிரிவு மாறுதல் அறிக்கை** தாக்கல் செய்ததாகவும், இறந்த மகேஷ்பாபு என்பவரின் பிரேதத்தின் மீது சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளின் முன்பு விசாரணை செய்து **அ.சா.ஆ.7 ஆன பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்ததாகவும், பின்பு இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு இவ்வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளர் திரு.சாலமன் ராஜா அவர்களின் தொடர் புலன் விசாரணைக்கு வைத்தாக சாட்சியமளித்துள்ளார்.

**19.** இந்நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.11 சாலமன்ராஜா அவரது சாட்சியத்தில், வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு ப.சா.7 மற்றும் ப.சா.10 ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிறகு இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச 41 (A)–ன் கீழ் அழைப்பணை அனுப்பினேன். அந்த **அ.சா.ஆ.8 ஆன ஒப்புகை சீட்டை** எதிரிப் பெற்று கொண்டதாகவும், எதிரியிடம் உரிய பிணையம் பெற்று காவல் நிலையத்தில் விடுவித்ததாகவும், பின்னர் ப.சா.10 மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமாரை விசாரணை செய்து **அ.சா.ஆ.9 ஆன TN–23–N2254 என்கிற வாகனத்தின் ஆய்வறிக்கையைப்** பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிறகு ப.சா.12 மருத்துவர் அரவிந்தன் என்பவரை விசாரணை செய்து இவ்வழக்கில் இறந்து போன மகேஷ் பாபு

என்பவரின் **அ.சா.ஆ.10 ஆன பிரேத பரிசோதனை அறிக்கை** பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு விசாரணையில் எதிரி மீது முதல் நோக்கு தோன்றியதால் அவரது விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச 279, 304(A)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**20.** தற்போது எதிரி மீது வனையப்பட்ட **இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன்** கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கையில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அவரது சாட்சியத்தில் சம்பவ சமயம் அவர் வீட்டில் இருந்ததாகவும், சம்பவம் தொடர்பாக போன் மூலம் தகவல் தெரிவித்ததன் பேரில்தான் சம்பவம் குறித்து தெரியும் என்றும், இறந்துபோன மகேஷ்பாபுவின் மனைவி மற்றும் பிரேத விசாரணை சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2ம் அவரது சாட்சியத்தில், சம்பவம் தொடர்பாக போன் மூலம் தகவல் தெரிவித்ததன் அடிப்படையில்தான் விபத்து குறித்து தெரியும் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 அவரது சாட்சியத்தில், அ.சா.ஆ.1 ஆன புகாரை தான் எழுதவில்லை சம்பத்குமார் என்பவர்தான் எழுதிக் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.ஆ.1 ஆன புகாரை கவனமாக பரிசீலிக்கையில், அரசு பேருந்து டவுன் பஸ் தடம் எண் 3 TN–23–N–2245 என்ற பஸ்சின் ஓட்டுநர் அ.சா.1ன் அப்பா மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்தின் பதிவு எண்ணானது TN–23–N–2254 ஆகும். இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 பார்த்திபன் என்பவர் மூலம் பதிவாகியுள்ள அ.சா.ஆ.4

ஆன முதல் தகவல் அறிக்கையிலும் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்தின் பதிவு எண் TN–23–N–2245 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

**21.** மேலும், இவ்வழக்கில் விபத்தானது 13.09.2021ம் தேதி இரவு சுமார் 7.15 நடந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பான அ.சா.ஆ.1 புகாரானது 2 நாட்கள் காலதாமதமாக 15.09.2021ம் தேதி இரவு 10.30 மணியவில்தான் அ.சா.1ன் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், காலதாமதத்திற்கான காரணம் குறித்து அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மூலம் தெளிவுப்படுத்தவில்லை. மேலும், இவ்வழக்கில் பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.6 சம்பவம் சமயம் அவர் அங்கு இல்லை என்றும், போலிசார் அடையாளம் காட்டிதான் சம்பவ இடத்தை தெரிந்துக்கொண்டதாகவும், அ.சா.8 அவரது சாட்சியத்தில், அம்மா உணவகம் அருகில் விபத்து நடந்ததாக கேள்விப்பட்டு தெரிந்துக்கொண்டதாக சாட்சியமளித்துள்ளனர்.

**22.** மேலும், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 அவரது சாட்சியத்தில், சம்பவ சமயம் எதிரி ஓட்டி வந்த பேருந்தின் எண்ணை கவனிக்கவில்லை என்றும், மேலும் சம்பவத்தன்று எதிரி அரசு பேருந்தை ஆரண் அடிக்காமல் வேகமாக ஓட்டி வந்து மகேஷ்பாபு மீது மோதியதாக சாட்சியமளித்திருந்தாலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட மற்ற கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 வினோத்குமார் அவரது சாட்சியத்தில், திடீரென்று சத்தம் கேட்டுதான் திரும்பி பார்த்தபோது விபத்து ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற

சாட்சி மற்றும் எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் அரசு பேருந்தின் நடத்துனரான அ.சா.7 முரளி அவரது சாட்சியத்தில், எதிரியை அரசு பேருந்தின் ஓட்டுநர் என்ற விதத்தில்தான் தெரியும் என்றும், வழக்கு தொடர்பாக வேறு எதுவும் தெரியாது என்றும், தான் பணி செய்த பேருந்தில் இந்நாள் வரையில் விபத்து எதுவும் நடக்கவில்லை என்றும், சம்பவத்தன்று எதிரி ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தில் தான் நடத்துநராக பணி செய்யவில்லை என்றும் சாட்யமளித்துள்ளார்.

**23.** மேலும், இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சி மற்றும் சம்பவ சமயம் ஆற்காடு பணிமலையில் மேலாளராக பணியாற்றி வந்த அ.சா.10 அவரது சாட்சியத்தில், வழக்கு தொடர்பாக எதுவும் தெரியாது என்றும், போலிசார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளதாகவும், சம்பவ சமயம் அரசு பேருந்தின் ஓட்டுநராக குமரேசன் என்பவரும், நடத்துனராக முரளி என்பவரும் பணியிலிருந்ததாக போலிசார் விசாரணை கூறவில்லை என்றும், மேலும் விபத்து நடந்த விவரம் குறித்து தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதிலிருந்து சம்பவ சமயம் எதிரிதான் அரசு பேருந்தை ஓட்டி வந்து இறந்துபோன மகேஷ்பாபு என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினாரா என்ற சந்தேகம் எழுகிறது.

**24.** மேலும், இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 காவல் உதவி ஆய்வாளர் திரு.பார்த்திபன் அவரது சாட்சியத்தில், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் பேருந்தின் ட்ரிப் சீட், இன்வாய்ஸ் ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றும், அரசு பேருந்தின் பணிமனை மேலாளரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், சாட்சியாக விசாரித்து பேருந்தின் ஆவணங்களை பார்த்து இருந்தால்தான் உண்மை

நிலவரம் தெரிய வந்திருக்கும் என்றும், வாகனத்தை யார் ஓட்டியது, விபத்தில் எந்த வாகனம் சம்பந்தப்பட்டது என்ற விவரம் தெரிய வந்திருக்கும் என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேலும், வழக்கின் சாட்சிகளாக சம்பவ இடத்தில் விசாரிக்கப்பட்ட அனைத்து சாட்சிகளும் அ.சா.1ன் உறவினர்கள் என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**25.** மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் அ.சா.11 அவரது சாட்சியத்தில், சம்பவ நடைப்பெற்றதாக சொல்லப்படும் இடத்தில் சி.சி.டி.வி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் சி.சி.டி.வி கேமராவை ஆய்வு செய்து, விபத்து குறித்த எந்த பதிவையும் இவ்வழக்கில் வழக்கு சொத்தாகவோ, சான்றாவணமாகவோ சேர்க்கப்படவில்லை. சம்பவமானது 13.09.2021ம் தேதி நடைப்பெற்று அதற்கான புகாரானது 15.09.2021ம் தேதி கொடுக்கப்பட்டு, போலிசாரால் விசாரணையானது 16.09.2021ம் தேதி தொடங்கப்பட்டுள்ள நிலையில், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளர் பரிசோதனைக்கு 13.08.2024ம் தேதியே அனுப்பப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.ஆ.9 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில், **“Causes could not been ascertained as the vehicle was belately produced for inspection”** என்று குறிப்பிட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், பேருந்தின் ஓட்டுநர் யார், நடத்துனர் யார், எந்த வழிதடத்தில் பேருந்து இயக்கப்படுகிறது மற்றும் பேருந்தின் பதிவு எண் அடங்கிய ட்ரிப் சீட்டை விசாரணையின்போது கைப்பற்றவில்லை என்று

ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.11 அளித்துள்ள சாட்சியத்தை நன்கு பரிசீலிக்கையில், இவ்வழக்கின் புலன் விசாரணையானது சரிவர மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. சாலை விபத்து போன்ற குற்றச் சம்பவங்களை தெளிவுப்படுத்த உதவும் விதமாக பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி கேமராவானது சம்பவம் நடந்த இடத்தில் பொருத்தப்பட்டிருந்தபோதிலும், அவற்றை சரிவர ஆய்வு செய்யாமல் புலன் விசாரணையானது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**26.** எனவே, மேற்சொன்ன விவாதங்களின் அடிப்படையில், விபத்தின் சூழ்நிலை மற்றும் விபத்திற்கு யார் காரணம் என்பது குறித்து எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசு தரப்பில் தெளிவாக நிரூபணம் செய்யப்படாத நிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு சாதகமாக வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பதே நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதி மேற்படி இவ்வழக்கு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**27. இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி மீது வனையப்பட்ட இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுகள், அரசு தரப்பு தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றவணங்களின்படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரியை மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து அவரை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

**28.** இவ்வழக்கில் வழக்கு சொத்தாக ஏதும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு சொத்து ஏதும் இல்லாததால் வழக்கு சொத்து குறித்த உத்தரவு இல்லை.

**29.** இவ்வழக்கின் எதிரி ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், எதிரி இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும், உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை இன்று என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 03.08.2026ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–ஈ.புவனேஷ்வரி,
நீதித்துறை நடுவர் எண்.2,(FAC)
வாலாஜாப்பேட்டை.

<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | : | திருமதி.துர்காதேவி | புகார்தாரர் |
| அ.சா.2 | : | திருமதி.ஞானசௌந்தரி | பிரேத விசாரணை சாட்சி |
| அ.சா.3 | : | திரு.மகேந்திரன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | : | திரு.வினோத்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | : | திரு.மகேந்திரன் | பிரேத விசாரணை சாட்சி |
| அ.சா.6 | : | திரு.சம்பத்குமார் | பார்வை மகசர் சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.7 | : | திரு.முரளி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.8 | : | திரு.வேலு | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.9 | : | திரு.பார்த்திபன் | முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.10 | : | திரு.காபார் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.11 | : | திரு.சாலமன் ராஜா | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | : | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.6 | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3/அ.சா.8 | : | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4/அ.சா.9 | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.9 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6/அ.சா.9 | : | பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.7/அ.சா.9 | : | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8/அ.சா.11 | : | ஒப்புகை சீட்டு |
| அ.சா.ஆ.9/அ.சா.11 | : | TN–23–N–2254 பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10/அ.சா.11 | : | பிரேத பரிசோதனை அறிக்கை |

3. **<u>அரசுதரப்பில் சான்று பொருள்:-</u>** இல்லை

4. **<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:-</u>** இல்லை

ஓம்/-ஈ.புவனேஷ்வரி,

நீதித்துறை நடுவர் எண்.2,(FAC)

வாலாஜாப்பேட்டை.

**குறிப்பு :-**

1. சாட்சிகள் யாரையும் மூன்று கேட்புரைக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு பற்றிய முடிவு முறையிடுபவருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
4. தீர்ப்பு நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் இராணிப்பேட்டை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

//உண்மை நகல்//

E BHUVANESHWARI

Judicial Magistrate No.II, Walaja.
Digitally signed by E BHUVANESHWARI
Date: 2026.08.03 16:37:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,(FAC)
வாலாஜாபேட்டை.